**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, PATTUKKOTTAI**

| | | |
|---|---|---|
| Case Number | | CC No. 18/2023 |
| Deposition of witness | | PW- 4 /LW- 5 |
| Name | | திரு. தகலா |
| Father's/Husband Name | | திரு. வாகுபிள்ளை |
| Village | | அதிராம்பட்டிணம் |
| Taluk | | பட்டுக்கோட்டை |
| Age | | 65/2026 |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 10th day of April 2026**

**(சாட்சியிடம் சத்தியப்பிரமாணம் எடுப்பதற்கு நீதிமன்றத்தால் அதிகாரம் அளிக்கப்பட்ட நீதிமன்ற அலுவலர் திரு.அகிலன், Junior Assistant என்பவரால் சாட்சியிடம் சத்தியபிராமாணம் எடுக்கப்பட்டது)**

**(சாட்சியை நீதிமன்ற தலைமை காவலர் 914 தமிழ்செல்வன் என்பவர் அடையாளம் காட்டி நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தப்பட்டார்)**

**முதல் விசாரணை**

நான் தற்போது அதிராம்பட்டிணத்தில் குடியிருந்து ஷாப்பிங் சென்டர் கடை நடத்தி வருகிறேன். தேதி, வருடம் ஞாபகம் இல்லை. சுமார் 8 வருடங்களுக்கு முன்பு ஒரு நாள் காலையில் நான் நடைபயிற்சி மேற்கொண்டபோது ஷேக்தாவுத் வாயில் இரத்தகாயத்துடன் ரோட்டில் நின்றார். அந்த சண்டை சம்பந்தமாக போலிஸார் சம்பவ இடத்தை பார்வையிட்டு படம் வரைந்து அதில் என்னிடம் சாட்சி கையொப்பம் பெற்றுக்கொண்டார்கள். என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள இரண்டாவது சாட்சி கையொப்பம் என்னுடையதுதான். அது **அ.சா.ஆ.** 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலிஸார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

எந்த காவல் அதிகாரி என்னிடம் விசாரித்து கையொப்பம் பெற்றார் என்றால் எனக்கு பெயர் தெரியாது. எந்த இடத்தில் வைத்து நான் கையொப்பமிட்டேன் என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. சம்பவ இடத்தில்

அருகில் வீடுகள் உள்ளதா என்றால் உள்ளது. காயம்பட்ட நபர் மட்டும் தான் நான் பார்த்தபோது வந்தாரா என்றால் ஆமாம், மற்றவர்கள் தூரத்தில் நின்றார்கள். நான் சொல்வது போல் போலிஸார் என் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிடவில்லை என்றாலும், காவல் நிலையத்தில் வைத்துதான் நான் சாட்சி கையொப்பம் இட்டேன் என்றாலும் நான் கடை வைத்துள்ளதால் போலிஸார் கேட்டுக்கொண்டதால் பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>மறு விசாரணை இல்லை</u>**

மேற்கண்ட சாட்சியமானது திறந்த நீதிமன்றத்தில் சாட்சியானவர் சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் நேரடியாக கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சி படித்து பார்த்து / படிக்க கேட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பாக கையெழுத்து / கைரேகை செய்யப்பட்டது.

ஓம்/- திரு.த.சுதர்சன் M.A.,L.L.B.,
குற்றவியல் நீதித்துறை நடுவர்,
பட்டுக்கோட்டை